

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி, ஜீவா நகர் பகுதிக்குட்பட்ட 72வது வட்டம் பைகரா பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தனசெல்வம், பகுதிச் செயலாளர் காவேரி, வட்டச் செயலாளர் ராஜேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர் முருகானந்தம், கழக நிர்வாகிகள் மதி வெங்கடேஷ், சசி தேவா, வெற்றிச்செல்வன், ஐயப்பன் மதி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பயனாளிகள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட பரவை பேரூராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முதற்கட்ட முகாமில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டு பெறப்பட்ட மனுவுக்கு உடனடி தீர்வாக பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மணிகண்டன் மற்றும் அதிகாரிகள், கழக நிர்வாகிகள், திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### இன்று தியாகிகள் தினம்

# தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்!

*சென்னை, ஜூலை 17 -*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், ஜூலை திங்கள் 17ஆம் நாள் தியாகிகள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அமைச்சர் பெருமக்கள், தியாகிகளின் தினத்தை முன்னிட்டு, இன்று (17.7.2025 ) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ள தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார், தியாகி செண்பகராமன் ஆகியோர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற தியாகிகளின் தியாக வரலாற்றை நினைவு கூறும் வகையில், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 2.10.1998 அன்று தியாகிகள் மணி மண்டபம் திறந்து வைக்கப் பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தியாகிகளைப் போற்றும் வகையில் (17.7.1999) அன்று தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் மார்பளவுச் சிலைகளையும், 17.7.2008 அன்று தியாகி செண்பகராமன் அவர்களின் திருவுருவச் சிலையினையும் சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தார்கள்.

தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள சேரன்குளத்தில், 1907 ஆம் ஆண்டு பிறந்து, மன்னார்குடியில் பள்ளிப்படிப்பையும் திருச்சி நேஷனல் கல்லூரியில் பட்டப்படிப்பையும் முடித்தார். இவர் இளம் வயதிலேயே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு, இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தவும் தன்னை தயார்படுத்திக் கொண்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற "சைமனே திரும்பிப் போ" என்ற போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகம் இருக்கும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள கொடிக்கம்பத்தில் நள்ளிரவு நேரத்தில் பாது காப்புப் பணியில் இருந்த இராணுவ வீரர்கள் எவருக்கும் தெரியாமல் ஏறி பிரிட்டிஷ் கொடியான யூனியன் ஜாக்கை இறக்கி விட்டு, இந்திய தேசியக் கொடியை ஏற்றிய மாவீரர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆவார்.

தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் விருதுநகரில் உள்ள மண்மலைமேடு கிராமத்தில் பெரிய கருப்பசாமி - வள்ளியம்மை தம்பதியினருக்கு 1895 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். 1914 ஆம் ஆண்டு பெண்கள் சமுதாய வளர்ச்சிக்கான சங்கத்தின் செயலாளராகவும், கதர் வளர்ச்சிக்கான பணியையும் மேற்கொண்டார். 1917 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

**79 நாட்கள் உண்ணாவிரதம்!**

1920 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களைச் சந்தித்து அவரை தனது குருவாக ஏற்றுக் கொண்டார். சுதந்திரத்திற்குப் பின் மொழிவழி மாநிலங்கள் அமைந்த போது சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' எனப் பெயரிட வேண்டுமெனக் கோரி தியாகி சங்கரலிங்கனார் 79 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, தமது 58ஆவது வயதில் உயிர் துறந்தார்.

தியாகி செண்பகராமன் அவர்கள் திருவனந்தபுரத்தில் 15.9.1891 அன்று பிறந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது ஆங்கில அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். தாய்நாட்டை வணங்கி 'ஜெய்ஹிந்த்' எனும் முழக்கத்தை முதன் முதலில் எழுப்பியவர் தியாகி செண்பகராமன் அவர்கள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்திற்கு முன்னோடியாக இருந்த இந்திய தேசியத் தொண்டர் படையை உருவாக்கியவரும் தியாகி செண்பகராமன்தான். அவர் 26.5.1934 அன்று இயற்கை எய்தினார்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு இன்னுயிர் நீத்த விடுதலைப் போராட்டத் தியாகிகள் சங்கரலிங்கனார், ஆர்யா (எ) பாஷ்யம், செண்பகராமன் ஆகியோரின் மாபெரும் தியாகங்களைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று (17.7.2025) காலை 9.30 மணியளவில் கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் நடைபெறும் தியாகி கள் தின நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி சிறப்பிக்கிறார்கள்.



தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழிகாட்டின்படி தேனி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருள்வாசகன் தலைமையில் பழனி செட்டிபட்டி பேரூர் பகுதியில் வீடு வீடாகச் சென்று ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஆண்டார்கொட்டாரத்தில் மாவட்ட அமைப்பாளர் மு.இளங்கோ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஹக்கீம் என்ற முகமது அப்துல் காதர், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீமான், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கார்த்தி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் குமரேசன், வெற்றிச்செல்வன், ஐயப்பன், மருதுராஜா, வன்னி முத்துப்பாண்டி, தலைமைக் கழக பேச்சாளர் அலெக்சாண்டர், இளம் பேச்சாளர் சவுமியா உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், தி.மு.க.வினர் மற்றும் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன இத்திட்டத்தின் மூலம் மனுக்கள் 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.அந்த வகையில் பரமக்குடி சட்டமன்றத் தொகுதி பரமக்குடி வடக்கு நகருக்கு உட்பட்ட மஞ்சள் பட்டினம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நகர்புறங்களில் 13துறைகள் 43சேவைகள் கொண்ட உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பு முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார். உடன் நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி, பரமக்குடி வட்டாட்சியர் வரதன், பரமக்குடி நகராட்சி ஆணையாளர் முத்துசாமி, பரமக்குடி நகராட்சி பொறியாளர் சுரேஷ், பரமக்குடி வடக்கு நகர கழகச் செயலாளர் ஜீவரத்தினம், நகர் மன்ற உறுப்பினர் தேவ கிட்டு மற்றும் வார்டு செயலாளர்கள் வார்டு பிரதிநிதிகள், மகளிர் அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், அனைத்து துறையினுடைய அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.




எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளையொட்டி ராஜேஷ் அட்வகேட் அசோசியேட்ஸ் ஏற்பாட்டில் வழக்கறிஞர்களுக்கான சிறப்பு கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றி பெற்றவர்களுக்கு இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கினார். இதில் பி.எஸ்.அமுல்ராஜ், கே.சந்திரமோகன், ஜி.மோகனகிருஷ்ணன், ஆர்.கிருஷ்ணகுமார் மற்றும் பலர் பங்கேற்றனர்.



தேனி தெற்கு மாவட்டம் கோம்பை பேரூர் பகுதிகளில் 'ஓரணியில் தமிழ்நாடு' வீடு வீடாகச் சென்று புதிய வாக்காளர் சேர்ப்பு பணியை ஒன்றியச் செயலாளர் அணைப்பட்டி முருகேசன் துவக்கி வைத்தார். உடன் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வசந்தன், பேரூர் செயலாளர் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.